**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**டி.வி.சி. எண் : 2/2018**

**எ.ம. சா.:1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ராமச்சந்திரன் |
| ஊர் | : | |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 22.09.2023.**

**மனுதாரர் ஆஜர். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் ஆஜர்.**

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1) நான் M.Sc., B.Ed., படித்துள்ளேன். எனது பூர்வீக ஊர் தேவீரஅள்ளி ஆகும். மனுதாரரும் அதே கிராமத்தை சேர்ந்தவர் ஆவார். எங்களுக்கு திருமணம் தேவீரஅள்ளி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் 26.06.2016 ல் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்பு மனுதாரரை நான் காதல் செய்யவில்லை. மனுதாரர் என்னை காதலிப்பதாக சொன்னார். ஆனால் நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. திருமணத்திற்கு 6 மாதத்திற்கு முன்பு மனுதாரர் என்னை காதலிப்பதாக சொன்னார். அதை பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. மனுதாரரிடம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், திருமணத்திற்கு மூன்று ஆண்டுகள் முன்பிருந்தே நான் மனுதாரரை காதலித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

2) மனுதாரரை திருமணத்திற்கு முன்பு காதலித்து திருமணத்திற்கு முன்பு அவரை கற்பம் ஆக்கினேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே கற்பமுற்றதால் கருக்கலைப்பு மாத்திரை வாங்கி கருவை கலைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. கருவை கலைத்துவிட்டு திருமணம் செய்யாத காரணத்தால் மனுதாரர் பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரில் மனுதாரரை நான் திருமணம் செய்து கொள்வதாக காவல் நிலையத்தில் ஒப்புக்கொண்டேன் என்று சொன்னால் போலீசார் மிரட்டியதால் அவ்வாறு கையெழுத்து செய்தேன்.

3) அன்றைய தினமே திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். பின்னர் பின்னிட்டுதான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்னை மிரட்டியது சம்மந்தமாக உயர் அதிகாரிகளிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஏன் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் புகார் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றும் சம்பவம் உண்மை என்பதால்தான் நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் திருமணத்தில் 2,3 எதிர்மனுதாரர்களான எனது பெற்றோர்களுக்கு விருப்பம் இல்லை என்றால் சரிதான். அவர்கள் காவல் நிலையத்தில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லையா என்றால் எனது பெற்றோர்கள் மகன் தவறு செய்திருந்தால் வழக்கு போட்டுக்கொள்ளுங்கள் என்று சொன்னார். ஆனால் அவர்கள் வழக்கு போடவில்லை.

4) மனுதாரருடன் திருமணம் நடந்த பிறகு என்னுடைய வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். திருமணம் நடைபெற்றவுடன் தாம்பத்திய உறவில் ஈடுபடவில்லை. திருமணத்திற்கு பிறகு என்னை பிரச்சனை என்றால் மனுதாரரே பிரச்சனை ஏற்படுத்தி நான் இல்லாத போது காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளார். முதலில் 2016 ம் ஆண்டு நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் 2 வது திருமணம் செய்து கொண்டதாக புகார் கொடுத்தார். மேற்படி புகாரில் விசாரணை மேற்கொண்டு 2 வது திருமணம் நடைபெறவில்லை என்று உறுதி செய்து மனுதாரருக்கு அறிவுரை கூறி என்னோடு அனுப்பிவைத்தார்கள்.

5) நான் காணாமல் போனதாக அந்த புகாரில் தெரிவித்திருந்தார். எனக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் எனது பாட்டி வீட்டில் இருந்தேன். நான் உடல்நலம் சரியில்லாத விவரத்தை மனுதாரரிடம் தெரிவித்தேனா என்றால் அவருக்கே அந்த விவரம் தெரியும். எனக்கு உடல்நிலை குறைபாடு ஏற்படவில்லை என்றும், மனுதாரரை விட்டு பிரிந்து செல்வதற்காக எனது அத்தை வீட்டில் சென்று வசித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. வசந்தா எனக்கு அத்தை ஆவார். தற்போது கிருஷ்ணகிரியில் வசித்து வருகிறார். 2016 ம் ஆண்டு தேவீரஅள்ளி கிராமத்தில் வசித்து வந்தார்.

6) எனது அத்தை வீட்டில் சுமார் 2 ஆண்டுகள் குடியிருந்தேன். அப்போது மனுதாரரும் என்னோடு சேர்ந்து வசித்து வந்தார். ஒரு வாரம் அதிகபட்சம் இருப்பார். பின்னர் ஏதாவது பிரச்சனை செய்து சென்றுவிடுவார். மனுதாரர் பிரச்சனை செய்த

விவரத்தை நான் அவரது பெற்றோரிடம் நேரடியாக சொல்லவில்லை. மனுதாரர் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களும் எங்களோடு எனது அத்தை வீட்டில்தான் இருந்தார்கள். மனுதாரர் என் மீதும், எனது பெற்றோர் மீதும் தன்னை பாத்ரூம் அனுமதிக்காமலும், உணவு கொடுக்காமலும், கொடுமைப்படுத்தியதால் மனுதாரர் 14.10.2016ம் தேதி அனைத்து மகளிர் காவல் நிலையம் கிருஷ்ணகிரியில் என் மீதும், மற்ற எதிர்மனுதாரர்கள் மீதும் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் நாங்கள் அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

7) போலீசார் விசாரணை செய்துவிட்டு அவ்வாறு நடக்காத காரணத்தால் மனுதாரரிடம் ஏன் பொய்யாக சொல்கிறாய் என்று கூறி சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், போலீசார் என்னிடம் மனுதாரரை இனிமேல் கொடுமைப்படுத்தக்கூடாது என்று அறிவுரை கூறிவிட்டு சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார் என்பதற்காக எனது தாயார் ஆன 3ம் எ திர்மனுதாரர் மனுதாரருக்கு சூடு வைத்துவிட்டதாக 10.11.2016ம் தேதி கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆனால் நாங்கள் சூடு வைக்கவில்லை. அது போலீசாருக்கும் தெரியும். அது தானே வைத்துக்கொண்ட சூடு ஆகும். மேற்படி விவரம் போலீசாருக்கு எப்படி தெரியும் என்றால் மனுதாரர் தனது தாயாருடன் தொலைபேசியில் பேசிய பதிவு மூலமாக தெரியும். அந்த பதிவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் தாக்கல் செய்யப்போகிறேன்.

8) யாருடைய தொலைபேசி மூலமாக மேற்படி சங்கதிகள் பேசப்பட்டது என்றால் மனுதாரரின் தொலைபேசியிலிருந்து மற்றொரு பெண்ணுடைய தொலைபேசிக்கு பேசப்பட்டது. அந்த பெண் யார் என்று எனக்கு தெரியாது. எனது வீட்டில் மனுதாரர் இருந்தவரை மனுதாரருக்கு தனியாக தொலைபேசி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரின் மொபைல் எண் எனக்கு தெரியாது. அவருக்கு மொபைல் எண் இல்லை என்றும், இருந்திருந்தால் தொலைபேசி எண் எனக்கு தெரிந்திருக்கும் என்று

சொன்னால் சரியல்ல. 10.11.2016 ம் தேதி மதியம் நேரம் குறிப்பாக தெரியவில்லை. பேசியுள்ளார்கள்.

9) மனுதாரரை நானும், எனது பெற்றோர்களும் அசிங்கமாக பேசி, அடித்து கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு வெளியே துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல. வரதட்சணை கேட்டதாக மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். ஆனால் அவ்வாறு எந்தவித வரதட்சணையும் நான் கேட்கவில்லை. மனுதாரர் தனது உறவினரிடம் பேசும்போது ஆள் வைத்து என்னுடைய உயிரை எடுத்துவிடுவேன் என்று பேசிய விவரம் எனக்கு எவ்வாறு தெரியவந்தது என்றால் தொலைபேசி உரையாடலில் மனுதாரர் தனது அண்ணனுடன் பேசியுள்ளார்.

10) மேற்படி விவரம் மனுதாரரின் தொலைபேசியில் பதிவாகியுள்ளது. எந்த தேதியில் பேசினார்கள் என்று தேதி நினைவில் இல்லை. மனுதாரர் என்னுடன் சண்டை போட்டு சென்றுவிட்டார். பின்னர் எவ்வாறு தொலைபேசி பதிவு எனக்கு கிடைத்தது என்று சொன்னால் மனுதாரரிடன் ஏற்கனவே தொலைபேசியை வாங்கி பார்த்தேன். அப்போது மேற்படி உரையாடல்கள் தெரியவந்தது. மனுதாரரின் மொபைல் என் வசம்தான் உள்ளது. மேற்படி விவரத்தை பிரமாண வாக்குமூலத்திலோ, எதிருரையிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் உறவினர் யார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

11) மனுதாரர் என்னுடன் ஒரு வருடம் சேர்ந்து வாழாமலும் பணிவிடை செய்யாமலும் இருந்து வந்ததால் அவருடன் சேர்ந்து வாழ எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வந்தபோதும் நான் அதை அனுமதிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரை நான் தொடர்ந்து பாலியல் தொல்லை, வரதட்சணை கொடுமை, உணவு கொடுக்காமல் பராமரிக்காமல் வந்து, அடித்து கொடுமைப்படுத்தியதால் மனுதாரர் காவல் நிலையத்தில் 01.03.2018 ம் தேதி புகார் கொடுத்தார் என்று சொன்னால் புகார் கொடுத்தார் ஆனால் மனுதாரர் சொன்னது போல் எவ்வித கொடுமையோ, வேறு செயலிலோ நாங்கள் ஈடுபடவில்லை.

12) மேற்படி புகாரின் மீது 03.03.2018 ம் தேதி தொடர்ந்து நிறைய புகார்கள் வந்ததால் சமூக நலத்துறைக்கு கிருஷ்ணகிரிக்கு அனுப்பினார்கள் என்று சொன்னால்

சரிதான். சமூக நலத்துறையில் என்னையும், எனது பெற்றோரையும் விசாரணை செய்தார்கள். மேற்படி புகாரின் மீது முழு விசாரணைக்கு பின்பு எவ்வித தீர்வும் ஏற்படாததால் நடவடிக்கைக்காக நீதிமன்றத்திற்கு மனுவை அனுப்பினார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு தேவீரஅள்ளி கிராமத்தில் சொந்தமாக வீடோ, நிலமோ இல்லை.

13) எனது தாத்தா பெயரில் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. ரேசன் பொருட்களை தேவீரஅள்ளியில்தான் வாங்கி வருகிறோம். ஆதார், குடும்ப அட்டை ஆகியவை தேவீரஅள்ளி முகவரியில் தான் உள்ளது. கதவு எண். 4 ஆகும். அந்த வீடு யாருக்கு சொந்தமானது என்றால் எனது அப்பா மற்றும் அவரது உடன்பிறந்தவர்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும். முனுசாமி எனது தாத்தா ஆவார். முனுசாமியின் தம்பி கோபால் என்பவர் எனக்கு தெரியாது.

14) தேவீரஅள்ளி கிராமத்தில் எனது தாத்தாவிற்கு சொத்து உள்ளது என்றும் அந்த சொத்தில் எனக்கு பங்கு உள்ளது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்ன வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் நான் TNPSC தேர்வுக்கு படித்துக் கொண்டிருக்கிறேன். கடந்த 5 ஆண்டுகளாக அதே வேலையைதான் செய்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வேலை மூலமாக மாதம் ரூ. 30,000/- சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக எந்த வேலையும் செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

15) விவாகரத்து கேட்டு கிருஷ்ணகிரி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.136/2019 தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் அந்த வழக்கில் ஆஜர் ஆனார். அந்த வழக்கானது 15.07.2020 ல் நான் ஆஜராகதா காரணத்தால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனது வழக்கறிஞர் இறந்துவிட்டதால் அதன் பிறகு வழக்கை நான் நடத்தவில்லை. வழக்கு அவ்வாறு தள்ளுபடி ஆகவில்லை என்றும், மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துவிட்டு பின்பு தள்ளுபடிக்கு விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் எனக்கு சாதகம் இல்லாத காரணத்தால் நடத்தாமல் விட்டேன் என்றால் சரியல்ல.

16) பின்னர் மேற்கொண்டும் மேற்படி வழக்கை நடத்த நான் முயற்சி எதுவும் எடுக்கவில்லை. நான் கணவர் என்ற முறையில் மனுதாரருக்கு தற்போது வரை எவ்வித பராமரிப்பும் செய்யவில்லை என்றால் மனுதாரர்தான் வற்புறுத்தி அனைத்து பிரச்சனையும் செய்து வருகிறார். மனுதாரருக்கு கணவர் என்ற முறையில் நான் ஜீவனாம்சம் முறையில் நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரை நான் கொடுமைப்படுத்தியுள்ளதால் தண்டிக்கடமைப்பட்டுள்ளுவன் என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களும் தண்டிக்க கடமைப்பட்டுளளவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.